Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654


# தினத்தளம்

நடுநிலை நாளிதழ்

PRGI NO: TNBIL/25/A3556


செய்தியாளர்கள் தேவை
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 23 · ஞாயிற்றுக்கிழமை Sunday · 23.11.2025 · பக்கங்கள் Pages:4 · ₹6 · ஈரோடு Erode

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் 2 நாள் சுற்றுப்பயணம்:
# கோவை, ஈரோடு மாவட்டங்களில் கள ஆய்வு



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோவை,ஈரோடுமாவட்டங்களில் (25.11.25), (26.11.25) கள ஆய்வுப் பணிகளுக்காக 2 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார். முதல் நிகழ்ச்சியாக 25.11.2025 அன்று காலை கோவையில் செம்மொழிப் பூங்காவை திறந்து வைக்கிறார்கள்

மாலையில் தொழில்துறை சார்பில் பல்வேறு தொழில் நிறுவனங்களுடன் நடைபெறும் புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்கள். இரண்டாம் நாளாக 26.11.2025 அன்று காலை ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஜெயராமபுரத்தில் மாவீரன் பொல்லான் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தினை திறந்து வைக்கிறார்.

அதனை தொடர்ந்து தீரன் சின்னமலை மணிமண்டபம் சென்று, அவரதுதிருவுருவச்சிலைக்கு மலர்தூவி மரியாதை செய்கிறார்கள்

சோலார்புதியபேருந்து நிலைய வளாகத்தில் நடைபெறும்அரசுவிழாவில் ரூ.605 கோடியில் முடிவுற்றப் பணிகளைத் தொடங்கிவைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 1,84,491 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்கள்

மாலையில், சித்தோடு ஆவின் பால்பண்ணை வளாகத்தில் பால்வளத் தந்தைபரமசிவன் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைக்கிறார்.

மாவீரன் பொல்லான் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் திறப்பு

இரண்டாம் நாளான 26.11.2025 அன்று காலை 10.00 மணியளவில் ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஜெயராமபுரத்தில், சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தை திறந்து வைக்கிறார்கள்.

மாவீரன் பொல்லான் பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயரின் அத்துமீறலுக்கு எதிராகப் போர்ப்புரிந்த தீரன் சின்னமலையின் போர்ப்படையிலும், ஒற்றர் படையிலும் தளபதியாகத் திகழ்ந்தவர்.

ஈரோடு மாவட்டம் அரச்சலூர் அருகே உள்ள நல்லமங்காபாளையம் கிராமத்தில் பிறந்த பொல்லான். சிறுவயதிலிருந்து வாள், வில், மற்போரில் சிறந்த முறையில் பயிற்சிகள் பெற்றார். தீரன் சின்னமலை, வெள்ளையர் படையை எதிர்த்து 1801 இல் நடைபெற்ற பவானிப்போர், 1802இல்நடைபெற்ற ஓடாநிலைப் போர். 1,803 இல் நடைபெற்ற அரச்சலூர் போர் ஆகிய மூன்று போர்களிலும் பெற்ற வெற்றிகளுக்கு மூலகாரணமாகத் திகழ்ந்தவர் மாவீரன் பொல்லான்.

அதனால், சினம் கொண்ட ஆங்கிலேயப் படைத்தளபதி கர்னல் ஹாரிஸ் வீரர்களால், ஓடாநிலை கோட்டைக்கு அருகில் ஜெயராமபுரத்தில் மாவீரன் பொல்லான் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மாவீரன் பொல்லான் அவர்களது வீரத்தை போற்றும் வகையில் ஜெயராமபுரத்தில் முழு உருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் கட்டித்தருமாறு, பொல்லான்வீரவரலாறு மீட்புக் குழு பல ஆண்டுகளாக விடுத்த கோரிக்கையை ஏற்று, திராவிட மாடல் அரசு 4.90 கோடி ரூபாய் மதிப்பில்ஈரோடுமாவட்டம் மொடக்குறிச்சி ஜெயராமபுரத்தில் அமைத்துள்ள அவரது முழு உருவச்சிலையுடன் கூடிய அரங்கத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் (26.11.2025) காலை 10.00 மணியளவில் திறந்து வைக்கிறார்கள்.

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை திருவுருவச்சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்துதல்

தொடர்ச்சியாக, ஓடாநிலையில் அமைந்துள்ள சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை மணிமண்டப வளாகத்திற்கு நேரில் சென்று, அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

ஈரோடு மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

அதனைத் தொடர்ந்து, ஈரோடு, சோலார் புதிய பேருந்து நிலையத்தில் நடைபெறவுள்ள அரசு விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ரூ.605 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்து. புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 1,84,491 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்கள்.

பால்வளத் தந்தை சி.கு.பரமசிவன்திருவுருவச் சிலை திறப்பு

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 20.12.2024 அன்று ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், "சின்னியம்பாளையத்தில் பிறந்து நாட்டு விடுதலைக்காக பாடுபட்டதோடு, தன்னுடைய அயலாத முயற்சிகளால் பால் உற்பத்திகளைப் பெருக்கி, தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சிக்கு வித்திட்ட பால்வளத் தந்தை. சி.கு.பரமசிவம் திருவுருவச் சிலை ஈரோடு பால்பண்ணையில் நிறுவப்படும்" என்ற அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

கொங்கு மண்டலத்தின் பெருமையாகத் திகழ்ந்த சி.கு.பரமசிவன் 'பசுமை நிலம், வெண்மைப் பால்' என்ற கனவைக் கொண்டு நூற்றுக்கணக்கான பசுமாடு வளர்ப்பாளர்களை ஒன்றிணைத்து, தமிழ்நாட்டிற்குப் புதிய பொருளாதாரக் களத்தை உருவாக்கினார். விவசாயக் குடும்பங்களின் வருவாயை உயர்த்தவும், பால் விநியோக முறையை நவீனப்படுத்தவும்,பால்வளத் அர்ப்பணிப்புடன் செயல்பட்டவர். துறையைத் தொழில்மயமாக்கவும் தமிழ்நாடு அரசின் ஆவின் நிறுவனம், கூட்டுறவு பால் சங்கங்கள், பால் செயலாக்கக் கட்டமைப்புகள் – அனைத்தும் அவர் விதைத்த விதையின் செழிப்பான விளைவுகளாகும். அதனால் அவர் பால்வளத் தந்தை என அழைக்கப்படுகிறார்.

அத்தகைய பெரும் ஆளுமைக்கு நன்றி செலுத்தும் வண்ணம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் , ஈரோடு சித்தோடு ஆவின் பால்பண்ணை வளாகத்தில், ரூ.50 இலட்சம் செலவில் பால்வளத் தந்தை சி.கு. பரமசிவன் அவர்களின் திருவுருவச்சிலையினை நிறுவி 26.11.2025 அன்று மாலை 5.00 மணியளவில் திறந்து வைக்கிறார்கள்.

இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், மேயர். நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,துணைமேயர்,உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

# பயங்கரவாத எதிர்ப்பு குழு அமைக்க வேண்டும்; ஜி20 மாநாட்டில் பிரதமர் மோடி வலியுறுத்தல்






ஜோகன்னஸ்பர்க்: உலகளாவிய மருத்துவ குழு, போதைப்பொருள், பயங்கரவாதஎதிர்ப்புகுழுவை அமைத்து, இதற்கான சட்ட விரோத பணபரிமாற்றத்தை தடுக்க வேண்டும் என ஜி20 மாநாட்டில் பிரதமர் மோடி பேசுகையில் தெரிவித்தார்.

தென் ஆப்ரிக்காவிற்கு சென்றுள்ள பிரதமர் மோடி, இந்திய புலம்பெயர்ந்தோரின் உற்சாகமான கலாசார நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தார். கணபதிபிரார்த்தனை, சாந்தி மந்திரம் மற்றும் பிற தெய்வீக பிரார்த்தனைகளுடன் அவருக்கு இந்திய வம்சாவளியினர் வரவேற்பு அளித்தனர்.


ஜோகன்னஸ்பர்க் நகரத்தில் நடக்கும் ஜி20 உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்றுள்ளார். ஜி20 உச்சி மாநாட்டு நடக்கும் இடத்திற்கு வந்த பிரதமர் மோடியை அந்நாட்டு அதிபர் சிரில் ராமபோசா வரவேற்றார். உலகத் தலைவர்களை பிரதமர் மோடி சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

ந்தமாநாட்டில்இந்தியாமற்றும்உலகின் வளரும் நாடுகளின் பிரச்னை குறித்து மோடி விவாதித்தார். ஜி20 மாநாட்டின் முதல் அமர்வில் பிரதமர் மோடி உரை நிகழ்த்தினார். அப்போது அவர் பேசியதாவது: ஆப்ரிக்கா முதல் முறையாக ஜி20 உச்சிமாநாட்டை நடத்துவதால்,நிலையான வளர்ச்சியில் கவனம் செலுத்துவதற்கும் இதுவே சரியான தருணம். சுகாதார அவசரநிலைகள் மற்றும் இயற்கை பேரழிவுகளை எதிர்கொள்ளும்போது நாம் ஒன்றாகச் செயல்படும்போது நாம் வலுவாக இருக்கிறோம். எந்தவொரு அவசரநிலைகளின் போதும் விரைவான பயன்பாட்டிற்குத் தயாராக இருக்கும் சக ஜி20 நாடுகளிலிருந்து பயிற்சி பெற்ற மருத்துவ நிபுணர்களின்குழுக்களை உருவாக்குவதே நமது முயற்சியாக இருக்க வேண்டும்.

போதைப்பொருள் கடத்தலின் சவாலை, எதிர்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். உலகளாவிய மருத்துவ குழு, போதைப்பொருள், பயங்கரவாத எதிர்ப்பு குழுவை அமைத்து, இதற்கான சட்ட விரோத பணபரிமாற்றத்தை தடுக்க வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

முதலில் 2022ம் ஆண்டு இந்தோனேஷியாவிலும், 2023 ம் ஆண்டு இந்தியாவிலும், 2024ம் ஆண்டு பிரேசிலிலும் ஜி20 உச்சி மாநாடு நடந்தது குறிப்பிடத்தக்கது.

# அந்தமான் அருகே புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி: டெல்டா உள்ளிட்ட 16 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு



சென்னை:

அந்தமான் அருகே புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. இதன் காரணமாக டெல்டா உள்ளிட்ட 16 மாவட்டங்களில் (நவ.23) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியருப்பதாவது: தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

மத்திய ரேகையை ஒட்டிய இந்தியப்பெருங்கடல் மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டலகீழடுக்குசுழற்சி நிலவுகிறது.மலாக்கா ஜலசந்திமற்றும்அதனை ஒட்டிய தெற்கு அந்தமான் கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியது.

இது,வடமேற்கு திசையில் நகர்ந்து, 24-ம் தேதி வாக்கில், தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில், காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, அதற்கடுத்த 48 மணி நேரத்தில், வடமேற்கு திசையில் தொடர்ந்து நகர்ந்து தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் மேலும் வலுப்பெறக்கூடும்.

இதன் காரணமாக, தமிழகத்தில் நாளையும், நாளை மறுதினமும் ஒருசில இடங்களிலும், 25 முதல் 28-ம் தேதி வரை ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நாளை கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர்,மதுரை,அரியலூர், கள்ளக்குறிச்சி, புதுக்கோட்டை, கடலூர், டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகியவற்றில் ஒரிரு இடங்களிலும், 24-ம் தேதி கன்னியாகுமரி,திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, ராமநாதபுரம்,விருதுநகர், புதுக்கோட்டை, டெல்டா மாவட்டங்களிலும்,25-ம் தேதி கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களிலும்ஓரிருஇடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை, வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளையும், நாளை மறுதினம் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிமீ வேகத்திலும் இடையிடையே 55 கிமீ வேகத்திலும்வீசக்கூடும்.எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் ஊத்தில் 12 செமீ, நாலுமுக்கில் 11 செமீ, காக்காச்சி, மாஞ்சோலையில் தலா 9 செமீ,கன்னியாகுமரி மாவட்டம் மைலாடியில் 7 செமீ, சிற்றாறு, கன்னியாகுமரி, சிவகங்கையில் தலா 6 செமீ, கடலூர் மாவட்டம் லால்பேட்டை, கன்னியாகுமரி மாவட்டம் கொட்டாரம், திருநெல்வேலி மாவட்டம் பாபநாசம் ஆகிய இடங்களில் தலா 5 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt





முதலமைச்சர் ஸ்டாலினின் ஆணைக்கிணங்க மாயமான்குறிச்சி இந்து மேல்நிலைப் பள்ளி மற்றும் மருதம்புத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.




தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் வைத்து தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அன்புசகோதரி ராணி ஸ்ரீ குமார் மற்றும் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு A.K.கமல் கிஷோர் I.A.S., மற்றும் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு ஐயா S.பழனிநாடார் ஆகியோரது தலைமையில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டத்தில் கலந்து கொண்டார்.



உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு சேலம் மாவட்டத்தில் ஓவியப்போட்டி மற்றும் வண்ணத்திறன் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.பிருந்தாதேவி, அவர்கள் (21.11.2025) மாவட்ட ஆட்சியரகத்தில் தொடங்கி வைத்து, பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செண்பகவள்ளி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஷாலினி ஆகியோர் உள்ளனர்.

# பெங்களூருவில் ரூ.7.11 கோடி கொள்ளை சம்பவம்; போலீஸ் கான்ஸ்டபிள் உள்பட மூவர் கைது

பெங்களூரு: கர்நாடகாவின் பெங்களூருவில் வங்கி ஏடிஎம் வாகனத்தை வழிமறித்து ரூ.7.11 கோடி கொள்ளையடித்த சம்பவத்தில் போலீஸ் கான்ஸ்டபிள் உள்பட 3 பேரை போலீசார் கைது செய்துள்ளனர்.



ஜெபி நகரில் உள்ள தனியார் வங்கி கிளையில் இருந்து கோடிக்கணக்கான ரூபாயுடன் சென்று கொண்டிருந்த ஏடிஎம் வேனை சொகுசு காரில் வந்த சிலர் மறித்துள்ளனர். மத்திய அரசின் வருமான வரித்துறை அதிகாரிகள் என்று கூறிய அவர்கள், வேனில் உள்ள ஊழியரை மிரட்டி ரூ.7 கோடியுடன் தங்கள் வாகனத்தில் ஏற்றினர். பின்னர், டெய்ரி சர்க்கிள் அருகே காரை நிறுத்தி, வங்கி ஊழியரை கீழே தள்ளிவிட்டு அருகில் உள்ள பாலத்தில் வண்டியுடன் தப்பிவிட்டனர். இதனால், அதிர்ச்சி அடைந்த வங்கி ஊழியர் இது குறித்து உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவித்தார்.

வங்கி ஊழியரிடம் விசாரணை நடத்திய போலீசார், பன்னார்கட்டா சாலையில் சென்ற வேனை பிடிக்க அனைத்து சோதனைச் சாவடிகளையும் உஷார்படுத்தினர். இந்த சம்பவத்தில் வேனில் இருந்த ரூ.7.11 கோடியும் கொள்ளை அடிக்கப்பட்டது. பட்டப்பகலில் நிகழ்ந்ததுணிகரகொள்ளையைத் தொடர்ந்து, சொகுசு வேன் எங்கிருந்து வந்தது? அதன் பதிவெண் உள்ளிட்ட விவரங்களை கண்டறிய, சம்பவம் நிகழ்ந்த பகுதியில் உள்ள சிசிடிவி காட்சிகளை கைப்பற்றி விசாரணை நடத்தினர்.

இந்த நிலையில், ரூ.7.11 கோடி கொள்ளையடிக்க சம்பவத்தில் போலீஸ் கான்ஸ்டபிள் உள்பட 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பெங்களூரு போலீஸ் கமிஷனர் சீமந்த் குமார் சிங் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறிதாவது;கொள்ளையர்களிடம் இருந்து ரூ.5.76 கோடி முதற்க ட்டமாக பறிமுதல் செய்யப்பட்டது.எஞ்சிய தொகையை மீட்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது. இந்த சம்பவம் தொடர்பான விசாரணையில் 11 குழுக்களும், 200 போலீசாரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 30க்கும் மேற்பட்டோரிடம் விசாரணை நடத்தப்பட்டது. வங்கி ஏடிஎம் வாகனத்தின் பொறுப்பாளர், சிஎம்எஸ் இன்போசிஸ்டம் நிறுவனத்தின் முன்னாள் ஊழியர் மற்றும் கோவிந்தாபுரா போலீஸ் ஸ்டேஷன் கன்ஸ்டபிளை கைது செய்துள்ளோம். சம்பவத்தில் தொடர்புடைய மேலும் சில குற்றவாளிகளை பிடிக்க கோவா மற்றும் தென்னிந்திய மாநிலங்களுக்கு 6 குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளன, எனக் கூறினார்.



# தென்காசியில் செங்கோல் அன்னை ஆலய கொடியேற்று விழா

தென்காசி பங்கின் கிளை பங்கான செங்கோல் நகரில்அருள் பாலித்து கொண்டு இருக்கும் செங்கோல் அன்னை ஆலயத்தின் திருவிழாவானது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மூன்றாவது வாரத்தில் கொண்டாடப்படுவது வழக்கம் அதன்படி இந்த ஆண்டுக்கான திருவிழா கொடியேற்றம் நேற்று மாலை ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பாளையங்கோட்டை மறை மாவட்டம் தன்னூத்து பங்குத்தந்தை அருட்பணி சுந்தர் அடிகளார் தலைமையேற்று திருக் கொடியினை ஏற்றி வைத்தார். தொடந்து நடைபெற்றசிறப்பு திருப்பலியில் "அன்பு" என்கின்ற மையக்கருத்தில் சிறப்பான மறையுரை ஆற்றினார். அவருடன் இணைந்து தென்காசி பங்கின் பங்குத்தந்தையும் திருத்தல அதிபருமான ஜேம்ஸ் அடிகளாரும் இணைந்து திருப்பலி நிறைவேற்றினார்.

இவ்விழாவில் தென்காசி பங்கின் உதவிப் பங்குத் தந்தை ஜியோ சந்தனம் அடிகளார்,அருட் சகோதரிகள் சாந்தி, ரமணி, சகோதரர் கிரிஸ்டோபர், செங்கோல்நகர்நாட்டாண்மை மாணிக்கம் , ஆசிரியர்கள் சொரூபா , செல்வி, பிலிப்ராஜ் பயஸ், ஜான்சன், பிரதீபா, மெர்லின், திரவியம், பொறியாளர் பிரபு, பத்திரிகையாளர் ஜெரால்டு, ஆலய உபதேசியார் செல்வராஜ் கபிரியேல் மற்றும் திரளான இறைமக்கள் பலர் கலந்து கொண்டனர். நிறைவாக விழாவில் கலந்து கொண்ட அனைத்து இறைமக்களுக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது.



உலக குழந்தைகள் தினத்தை முன்னிட்டு தென்காசி சரகம் திருவள்ளுவர் துவக்க பள்ளியில் । பயிலும் குழந்தைகளின் எழுத்தாற்றலை மேம்படுத்துவதற்காக தென்காசி எழில் முகில் அமிஷோ நிறுவனத்தின் நிறுவனரும் முன்னாள் தென்காசி வட்டார கல்வி அலுவலர் (பணி நிறைவு) இளமுருகன் தனது நிறுவனத்தின் சார்பில் எழுது பொருட்கள் மற்றும் இனிப்புகளும் இலவசமாக வழங்கினார்.இந்நிகழ்ச்சியில் பள்ளியின் தலைமை ஆசிரியர் செல்வி, ஆசிரியர்கள் சொரூபா , ஜாஹிரா , மற்றும் பெற்றோர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# வேடந்தாங்கல் மேல்நிலைப் பள்ளியில் கலையரங்கம் கட்ட பூமி பூஜை

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே வேடந்தாங்கல் ஊராட்சியில் உள்ள மேல்நிலைப் பள்ளியில் கலையரங்கம் கட்ட, நேற்று பூமி பூஜை நடந்தது.



வேடந்தாங்கல் ஊராட்சியில், பறவைகள் சரணாலயம் செல்லும் வழியில் அரசு மேல்நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது.

இங்கு, 350 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகிறனர். இப்பள்ளியில், ஆண்டு விழா மற்றும் மாணவ, மாணவியருக்கு நடத்தப்படும் கலை திருவிழா போன்றவை நடத்த கலையரங்கம்இன்றி மண் தரையில் நடத்தப்பட்டு வந்தது.

இது குறித்து ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆகியோர் துறை சார்ந்த அதிகாரிகளிடம் கோரிக்கை மனு அளித்து வந்தனர்.

அதன்பேரில், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் தொகுதி மேம்பாட்டு நிதியில், 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கலையரங்கம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதற்கான பூமி பூஜைநேற்று,வேடந்தாங்கல் ஊராட்சி மன்ற தலைவர் வேதாச்சலம் முன்னிலையில்,அச்சிறுபாக்கம் ஒன்றிய குழு தலைவர் கண்ணன், உத்திரமேரூர் தி.மு.க., எம்.எல்.ஏ., சுந்தர், அச்சிறுபாக்கம் வாடக்கு ஒன்றிய செயலாளர் தம்பு தலைமையில்,பள்ளி வளாகத்தில் கலையரங்கம் கட்டுவதற்கான பூமி பூஜை நடந்தது.

இந்நிகழ்வில், பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்றனர். வேடந்தாங்கல் மேல்நிலைப் பள்ளியில் கலையரங்கம் கட்டுவதற்கான பூமி பூஜையில் பங்கேற்றமக்கள் பிரிதிநிதிகள்.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959


# திமுக உடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்த காங்கிரஸ் குழு அமைப்பு

சென்னை: தமிழக சட்டசபை தேர்தலைக் கருதி, திமுக உடன் கூட்டணி பேச்சு நடத்த காங்கிரஸ் குழு அமைத்துள்ளது. இதை வரவேற்றுள்ள முன்னாள் மத்திய அமைச்சர் சிதம்பரம்,'அரசல் புரசலான செய்திகளுக்கு இந்த அறிவிப்பு முடிவு கட்டும்' என்று தெரிவித்துள்ளார்.



தமிழகத்தில் அடுத்தாண்டு சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. தற்போது இருந்தே அனைத்து அரசியல்கட்சிகளும்கூட்டணிபேச்சுவார்த்தைஉள்ளிட்ட தேர்தல் பணிகளை முடுக்கி விட்டுள்ளன. காங்கிரஸ் கட்சி, நடிகர் விஜயின் தவெக உடன் கூட்டணி பற்றி பேச இருப்பதாக,அவ்வப்போது தகவல்கள் பரவி வந்தன. இந்த விவகாரம், தமிழக அரசியல் கட்சியினர் மத்தியில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. இத்தகைய சூழ்நிலையில், திமுக உடன் கூட்டணி பேச்சு நடத்த காங்கிரஸ், 5 பேர் கொண்ட குழுவை அமைத்து உள்ளது.அந்த குழுவில்,கிரிஷ் ஜோடங்கர், செல்வப்பெருந்தகை, சூரஜ் ஹெக்டே, நிவேதித் அல்வா, ராஜேஷ்குமார் ஆகிய 5 பேர் இடம் பெற்று உள்ளனர்.

இது குறித்து,முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழக சட்டசபை தேர்தலைக் கருதி திமுக உடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு காங்கிரஸ் தலைமை 'ஐந்து உறுப்பினர் குழு'வை நியமித்திருப்பதை வரவேற்கிறேன். இண்டியா கூட்டணியின் ஒற்றுமையை இந்த அறிவிப்பு வலியுறுத்துகிறது.அரசல் புரசலாக அவ்வப்போது வெளியிடப்படும் செய்திகளுக்கு இந்த அறிவிப்பு முடிவு கட்டும் என்று நம்புகிறேன். இவ்வாறு ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

# கொல்கத்தாவில் பயங்கர நிலநடுக்கம்



கொல்கத்தா: வங்கதேசத்தின் நா்சிங்டியில் என்ற பகுதியில் ) ஏற்பட்ட நிலநடுக்க அதிர்வுகள் மேற்கு வங்கத்தின் கொல்கத்தா உள்ளிட்ட பகுதிகள் உணரப்பட்டது.கொல்கத்தாவில் வீடு, கட்டடங்கள் குலுங்கியதால் மக்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

வங்கதேசத்தின் நா்சிங்டி தென்மேற்கே வெள்ளிக்கிழமை காலை 10.8 மணிக்கு 13 கி.மீ தொலைவில் 10 கி .மீ. ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும், இது ரிக்டா் அளவுகோலில் 5.7 அலகுகளாகப் பதிவானது என நி லநடுக்கவியல் மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கம் தலைநகர் டாக்காவிலும் உணரப்பட்டது. இந்த நிலநடுக்கத்தின் அதிா்வுகளால் கட்டடங்கள் இடிந்து விழுந்தன. பல இடங்களில் தீ விபத்து ஏற்பட்டது. மக்கள் பீதியடைந்து கட்டடங்களில் இருந்து அவசரமாக வெளியேறினா்.

நிலநடுக்கத்தின் பாதிப்புகளால் டாக்காவில் 3 பேரும், புறநகா்ப் பகுதியான நாராயண்கஞ்சில் ஒருவரும் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனா். நிலநடுக்கத்தின் மையப் பகுதியான நா்சிங்டி உள்ளிட்ட பகுதிகளில் நான்கு உயிரிழப்புகள் பதிவாகின. நாடு முழுவதும் 252 போ் காயமடைந்ததாக தகவல்கள் வெளியானது. இந்த நிலநடுக்கத்தின் அதிா்வுகள் மேற்கு வங்கத்தின் கொல்கத்தா உள்ளிட்ட பல பகுதிகளில் உணரப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன





தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் சார்பில் புதிதாகக் கட்டப்பட்ட 220 வீடுகள் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டிடத்தின் திறப்பு விழா இன்று(22/11/2025)தூத்துக்குடிமாவட்டம்,அய்யனடைப்புஊராட்சியில்நடைபெற்றது. திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, 220 வீடுகள் அடங்கிய அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டடத்தைத் திறந்து வைத்து, பயனாளிகளுக்கு குடியிருப்பிற்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில், தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதா ஜீவன், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# தேமுதிக எந்த கூட்டணியில் அங்கம் வகிக்கிறதோ அந்த கட்சி தான் ஆட்சியில் அமரும்

## பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பேச்சு

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தேவர் சிலை அருகில் நவம்பர் 20ஆம் தேதி வியாழக்கிழமை இரவு 8 மணியளவில் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் 'உள்ளம் தேடி,இல்லம்நாடி'என்ற புரட்சி பயணத்தை பொதுமக்களிடையே மேற்கொண்டனர்.இதில் தேமுதிக பொருளாளர் சுதீப் முன்னிலை வகித்தார்.

நடைபெற்ற இந்த புரட்சி பயணத்தில் பிரேமலதாவிஜயகாந்த்கூறியதாவது, "ராமேஸ்வரம் மானாமதுரை நான்கு வழி நெடுஞ்சாலை பாலத்திற்குகீழ்ராஜகம்பீரம் ரயில் பாதையில் உள்ள ரயில்வே கேட் நிரந்தரமாக மூடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், கன்னார் தெரு முதல் கிருஷ்ணராஜபுரம் காலனி பழைய பேருந்து நிலையம் வரை தரை பாலம் அமைக்க வேண்டும் எனவும், 13 மாவட்டங்களிலிருந்து சேகரிக்கப்படும் மருத்துவர் கழிவுகளை மனமிறை தொழிற்பேட்டையில் அமைய உள்ள மருத்துவ கழிவு சுத்திகரிப்பு நிலையத்திற்கு தேமுதிக எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் பிரேமலதா தெரிவித்தார்.

மேலும் தேமுதிக 2026 தேர்தலில் அங்கம் வகிக்கும் கூட்டணி தான் ஆட்சியில் அமரும் என்றும்,

2026 தேர்தலில் கூட்டணி ஆட்சி அமைச்சரவை அமையும் என்று கருத்துக்கணிப்புகள் தெரிவிப்பதாகவும், கடலூரில் ஜனவரி ஒன்பதாம்தேதி தேமுதிகசார்பாக மாபெரும் மாநாடு நடைபெற உள்ளதாகவும் தெரிவித்தார். இறுதியாக எஸ்ஐஆர் மூலமாக வாக்கு திருட்டு நடைபெறுவது வேதனை அளிப்பதாகவும், வருகின்ற சட்டமன்ற தேர்தலில் தேமுதிகவிற்கு வாக்களித்து வாய்ப்பு வழங்க பொதுமக்களை கேட்டுக்கொண்ட பிரேமலதா 'நல்லவர்கள் லட்சியம் வெல்லும் நிச்சயம்' என்று புரட்சி பயணத்தை முடித்துக் கொண்டார்".

இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர் ப. திருவேங்கடம், மாவட்ட துணை செயலாளர் மாயழகு, மாநில பொதுக்குழு உறுப்பினர் ராமு, மானாமதுரை மேற்கு ஒன்றிய செயலாளர் தர்மாராமு, மானாமதுரை நகர் கழக செயலாளர் அழகுவிசுவராஜன்,மற்றும்மானாமதுரை, இளையான்குடி மற்றும் திருப்புவனம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த தேமுதிக கட்சியின் அனைத்து அணிகளைச் சேர்ந்த முன்னாள் மற்றும் இந்நாள் சட்டமன்ற, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி மற்றும் கிளைகளை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் சுமார் 500க்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டனர்.

மேலும் புரட்சி பயணத்தை முன்னிட்டு மானாமதுரை நகராட்சி அலுவலகம் அருகில் தேமுதிக சார்பில் ஆடல் மற்றும் பாடல் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

குறிப்பாக பிரேமலதா



விஜயகாந்த் இந்த புரட்சி பயணத்தில் கூட்டணி நிலைபாடு குறித்தோ, அரசியல் கட்சிகளையோ, அளும் கட்சியையோபற்றிவிமர்சனம் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தேனாற்றை 48 கிலோமீட்டர் சுத்தப்படுத்தும் பணியில் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து செயல்பாட்டிற்கான

# முதற்கட்ட நிதி உதவியாக காரைக்குடி குளோபல் மிசின் மருத்துவமனை சேர்மன் Dr.குமரேசன் ரூ.5 லட்சம் காசோலையை காரைக்குடி தாசில்தாரிடம் வழங்கினார்

காரைக்குடி சுற்றுவட்டார கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கு முக்கிய நீர் ஆதாரமாக விளங்கும் தேனாறு . இது சுமார் 48 கிலோ மீட்டர் தூரத்தைக் கொண்டது, இதன் தொடக்கம்கோடநாட்ச்சி குளத்திலிருந்து பாம்வுவதாக கூறினார் அதன் விளைவாக தேனாற்றின் மீள் உருவாக்க பணிகளுக்காக முதல் கட்ட தொகையாக 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை தாசில்தாரிடம் வழங்கினார் .

இந்த நிகழ்வு குறித்து மருத்துவர் குமரேசன் உயர இந்த ஆறு நமக்கு ஆதாரமாக விளங்குகிறது .இதுவரை மாசுபட்டு புதர் மண்டி கிடந்த தேனாற்று வழிகளை மாவட்ட நிர்வாகம் பல கோடி ரூபாய் செலவில் சுத்தப்படுத்தும் பணியை தொடங்க உள்ளது .அதற்கு உதவியாக



பாற்றில் சங்கமிக்கும் .இந்த ஆற்றை மீண்டும் உயிர்பிக்க வேண்டும் ,அதாவது சுத்தப்படுத்தி மீள் உருவாக்க நடவடிக்கையை சிவகங்கை மாவட்ட நிர்வாகம் எடுத்துள்ளது. இதற்கு பல கோடி ரூபாய் செலவு ஆகும் என்பதால், தனியார் தொண்டு நிறுவனங்களை நாடியது இதன் அடிப்படையில் ,காரைக்குடி தாசில்தார் காரைக்குடி குளோபல் மிஷின் மருத்துவமனை சேர்மன் டாக்டர் குமரேசன் அவர்களை சந்தித்து பேசினார் .உடனடியாக நல்ல விசயத்திற்கு உதகூறும்போது நாம் சர்வதேச அளவில் ஆறுகள் பாதுகாப்பு தினமாக மார்ச் 14ஆம் தேதி கொண்டாடுகிறோம். மேலும், நதிகள் நமது உயிர் வாழ்வில் இன்றி அமையாதவாழ்வாதாரமாகும் .அவற்றை நாம் பாதுகாக்க வேண்டும் .

தொழிற்சாலை கழிவுகள், குப்பைகளை ஆற்றில் கலந்து மாச அவதை தடுக்க வேண்டும் .ஆறு நதிகளின் இருகரைகளிலும் மரங்களை நட்டு வளப்படுத்த வேண்டும் மழையால் வரும் நீரை குளங்கள், குட்டைகள் மற்றும் நிலத்தில் நீர்மட்டம் நாமும் இணைந்து அதாவது குளோபல் மிஷின் மருத்துவமனை மற்றும் டைம்ஸ் ஹெல்த் கேர் ஃபவுண்டேஷன் மற்றும் சாரிட்டபிள் டிரஸ்ட் மூலம் ரூபாய் 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை முதற்கட்ட பணிக்காக தாசில்தாரிடம் கொடுத்துள்ளோம். இதேபோல் பல சமூக அமைப்புகள் உதவ முன் வந்தால் கூடிய விரைவில் தேனாற்றை தேன் சுவை ஆறாக மாற்றலாம் என்பது எனது கருத்து என கூறினார். நிகழ்ச்சியில் தாசில்தார் உடன் சமூக ஆர்வலர் இஸ்மாயில்'

# இருசக்கர வாகனம் மீது அரசு பேருந்து மோதி வாலிபர் பலி

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை மாடல் காலனி பகுதியில் வசித்து வருபவர் வயது 33 இவர் இருசக்கர வாகனத்தில் உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்தில் இருந்து தனது வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார் விருத்தாசலம் சாலையில் உள்ள தாங்கல் ஏரி எதிரே சென்று கொண்டிருந்த பொழுது விழுப்புரத்தில் இருந்து திருச்சி நோக்கி சென்ற அரசு பேருந்து எதிர்பாராத விதமாக இரு சக்கர வாகனம் மீது மோதியது இதில் தலை-



யில்பலத்தகாயம்அடைந்த ராஜ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் உளுந்தூர்பேட்டை விருத்தாசலம் பிரதான சாலையில் நடைபெற்ற இந்த விபத்தின் காரணமாக அந்த சாலையில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது விபத்து பற்றி தகவல் அறிந்த உளுந்தூர்பேட்டை காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று உயிரிழந்த ராஜ் உடலைகைப்பற்றிபிரேத பரிசோதனைக்காக உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிசாரணைநடத்தி வருகின்றனர்.

# வளர்ச்சியில் சமூக நீதி அடிப்படையில் தமிழ்நாட்டின் பொருளாதார பெண்களின் பங்கு மேலும் அதிகரிக்க வேண்டும்

## ஈரோடு மாவட்ட கலெக்டர் கந்தசாமி வேண்டுகோள்

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு

வளர்ச்சியில் சமூகநீதி அடிப்படையில் தமிழ்நாட்டின் பொருளாதார பெண்களின் பங்கு மேலும் அதிகரிக்க வேண்டும்என்றஉயர்ந்த நோக்கத்தில் தமிழ்நாடு அரசு "தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (TWEES)" என்ற திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் அடுத்த 5 ஆண்டுகளில் ஒரு இலட்சம் மகளிரை தொழில் முனைவோராக்கிட தமிழ்நாடு அரசு உறுதி பூண்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தொழில் முனைப்பு கொண்ட மகளிர் மற்றும் திருநங்கையர்க்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சியும், தொழில் திறன் சார் பயிற்சியும் வழங்குவதோடு ரூ.10 இலட்சம் வரை திட்ட மதிப்பீட்டில் மேம்பட்ட தொழில்நுட்பம் கொண்ட கருவிகள் கொண்டு தொழில் புரிய பிணையமில்லாமல் கடனுதவி வங்கிகள் மூலம் வழங்கப்படும். திட்டத் தொகையில் 25% அதிகபட்சம் ரூ.2,00,000/- மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி, சேவை மற்றும் வணிகத் தொழில்கள் தொடங்கலாம்.

18 முதல் 55 வயதுக்குட்பட்ட, தமிழ்நாட்டில் நிரந்தரமாக வசிக்கின்ற மகளிர் மற்றும் திருநங்கையர் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம். அடிப்படைக் கல்வித் தகுதி மற்றும் குடும்ப வருமான வரம்பு எதுவும் இத்திட்டத்தின் கீழ் விதிக்கப்படவில்லை. தகுதியும் ஆர்வமும் கொண்டோர் புகை ப்படம், ஆதார் அட்டை, ரேஷன்அட்டை,விலைப்புள்ளி, திட்ட அறிக்கை, வங்கிக்கணக்குவிவரங்கள் இவற்றுடன் www.msmeonline.tn.gov.in என்ற இணையதளத்தின் வழியாக விண்ண ப்பங்களைப் பதிவு செய்யலாம்.

இத்திட்டத்தை செயல்படுத்த அனைத்து பொதுத்துறை மற்றும் தனியார் வணிக வங்கிகள், தாய்கோ வங்கி, கூட்டுறவு வங்கி மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்கள் தகுதி பெற்றவை. மகளிர்தொழில் முனைவோரின் சந்தைப்படுத்தும்திறனை உயர்த்துவதற்கான ஆலோசனைகளும்வழிகாட்டுதலும் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் அனைத்து வகையான வியாபாரம், உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த தொழில்களை தொடங்கலாம். எனினும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தயாரிப்புகள், கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் தயாரிப்பு, இன்டீரியர் மற்றும் ஃபேஷன் டிசைன் ஆகிய தொழில் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆதலால் ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த ஆர்வமும், தொழில் முனைவும் உள்ள மகளிர் மற்றும் திருநங்கைகள் நமது மாவட்டத்தில் தொழில் வாய்ப்பு உள்ள ஜவுளி, உணவு மற்றும் இதர வாய்ப்புள்ள தொழில்





நடவடிக்கைகள் சார்ந்த வியாபாரம். சேவைகள் மற்றும் உற்பத்தியில் ஈடுபட்டு பயன்பெற வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்திட்டம் குறித்த மேலான தகவல்களைப் பெறவும், விண்ணப்பம் பதிவு செய்வது தொடர்பான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல், வசதியாக்கல் பெறவும். பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம். ஈரோடு அவர்களை நேரடியாகவோ, 0424-2275440 என்ற தொலைபேசி வாயிலாகவோ தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது அல்லது www.msmeonline.tn.gov என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# காஞ்சியில் மக்களை சந்திக்கும் த.வெ.க. தலைவர் விஜய்:

## முக்கிய அறிவுறுத்தல்களை வெளியிட்ட பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த்!

சென்னை:

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் நாளை (நவ.23) காஞ்சிபுரம் ஜேப்பியார் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில்மக்களை சந்திக்கும் நிலையில், அதுகுறித்து முக்கிய அறிவுறுத்தல்களை அக்கட்சியின் பொதுச்செயலாளர் ஆனந்த் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக தவெக பொதுச்செயலாளர் ஆனந்த் வெளியிட்ட அறிக்கையில், "தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் கலந்து கொள்ளும் உள்ளரங்கு மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி, நாளை (23.11.2025) ஞாயிற்றுக்கிழமை, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஜேப்பியார் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில், காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.

இந்த நிகழ்ச்சியானது முழுக்க முழுக்க உள்ளரங்கு சந்திப்பு நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த, QR குறியீட்டுடன் கூடிய நுழைவுச்சீட்டுஅளிக்கப்பட்டுள்ள 2000 பேர் மட்டுமே இந்த உள்ளரங்கு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளஅனுமதிக்கப்படுவார்கள். வேறுயாருக்கும்கண்டிப்பாக அனுமதி கிடையாது. கழகத்தினரும் பொதுமக்களும் இதற்கு முழு ஒத்துழைப்பு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவி க்கப்பட்டுள்ளது. கரூர் சம்பவத்துக்குப் பிறகு பொதுமக்களைசந்திக்காமல் இருக்கும் தவெக விஜய், நாளை காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்தி ரத்தில் உள்ள தனியார் கல்லூரிவளாகத்தில்மக்கள் சந்திப்பை நடத்த திட்டமிட்டு ள்ளார். தவெகதலைவர் விஜய் கடந்த செப்.27-ம் தேதி கரூரில் பிரச்சாரம் மேற்கொண்டபோது கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இதன் பிறகு பொது நிகழ்வுகளில் விஜய் பங்கேற்காமல் இருந்து வந்தார். இதனிடையே, கரூர் சம்பவத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினரை சென்னைக்கே அழைத்து ஆறுதல் கூறினார். அண்மையில் கட்சியின் சிறப்பு பொதுக்குழுவை கூட்டிய விஜய், மீண்டும் மக்கள் சந்திப்புக்கு அவர் ஆயுத்தமானார். இதற்காக தமிழகம் முழுவதும் 4 ஆயிரம் பேரை தேர்வு செய்து 'மக்கள் பாதுகாப்புப் படை'யை உருவாக்கினார். அவர்களுக்கு



ராணுவம் மற்றும் காவல்துறையில் ஓய்வுபெற்ற அதிகாரிகளை கொண்டு பயிற்சியும் அளித்தார்.

இந்நிலையில், சேலத்தில் இருந்து டிச.4-ம் தேதி முதல் மீண்டும் பிரசாரத்தைத்தொடங்கவிஜய் முடிவு செய்தார். ஆனால் திருவண்ணாமலை திருக்கார்த்திகைதிருவிழா உள்ளிட்ட சில பாதுகாப்புக் காரணங்களால் வேறு ஒரு தேதியில் பிரசாரத்தை வைத்துக்கொள்ள போலீஸார் அறிவுறுத்தினர்.

தற்கிடையே, நாளை காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரத்தில் உள்ள தனியார் கல்லூரிவளாகத்தில்மக்கள் சந்திப்பை நடத்த விஜய் முடிவு செய்துள்ளார். இதற்காக கல்லூரி வளாக உள் அரங்கத்தில் போதுமான அளவு இருக்கைகளும், தடுப்பு வேலிகளும் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.காலை10மணிக்கு இந்த சந்திப்பு நடத்தப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.








தமிழ்நாடு துணை முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி மாநில செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு திமுக தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பாக ஈரோடு மாநகர் மல்லிகை அரங்கில் மாநில அளவிலான சதுரங்கம், கட்டுரை,ஓவியம், திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியை தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார்.இந்த நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார் , மாநகர திமுக கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் ,ஈரோடு மாநகராட்சியின் துணைமேயர் வே. செல்வராஜ் ,மாவட்ட துணைச் செயலாளர் ஆ.செந்தில்குமார் ,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ. திருவாசகம் , தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள்,கோட்டை பகுதி கழகச் செயலாளர் பொ. ராமச்சந்திரன் ,மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாணவ மாணவியர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் கூட்டுடன்காடு ஊராட்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ. 45 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்தை திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், தூத்துக்குடி மாவட்ட கூடுதல் ஆட்சியர் ஐஸ்வர்யா, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.







திமுக கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு மாநகர திமுக இளைஞரணி சார்பில்,ஈரோடு மாநகர துணை அமைப்பாளர் பா.ஜாகிர் உசேன் ஏற்பாட்டில் ஈரோடு மாநகர் சோலார் அட்சயம் அறக்கட்டளையில் ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் தலைமையில் நேற்று (22.11.2025 )காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது.




திமுக கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு மாநகர திமுக இளைஞரணி சார்பில்,ஈரோடு மாநகர துணை அமைப்பாளர் பா.ஜாகிர் உசேன் ஏற்பாட்டில் ஈரோடு சோலார் அட்சயம் அறக்கட்டளையில் ஈரோடு தெற்கு மாவட்ட திமுக கழக செயலாளர், தமிழ்நாடு வீட்டுவசதி,நகர்ப்புற வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி முதியவர்களுக்கு இனிப்புகள் வழங்கி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் திமுக கழக துணை பொதுச்செயலாளர்,நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ்,ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார்,மாவட்ட துணை செயலாளர் ஆ. செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (22.11.2025) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், அரச்சலூர் ஓடாநிலையில் உள்ள தீரன் சின்னமலை மணிமண்டபத்தில் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் ச.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

## Uddhav Sena's "High Command" Jab At Congress Amid Maharashtra Opposition Rift



*Mumbai:*

*What the Congress feels about an alliance between the MNS and Shiv Sena (UBT) does not matter at all if they want to join forces, Sena MP leader Sanjay Raut indicated in a post on X today.*

*The Congress in Maharashtra has been cautious of making any commitment without consulting the party's leadership in Delhi. Alluding to this, Raut said it is the Congress's personal decision whatever they decide, but the MNS or the Shiv Sena (UBT) won't wait for anyone's permission.*

*"... Shiv Sena and MNS have already come together; this is the people's will. There is no need for anyone's orders or permission for that. Sharad Pawar and the Left parties are also together on this," Raut said in a post on X. Sharad Pawar's NCP has indicated it would be better to unite and face the BJP head-on. He made this known at a party meeting in Mumbai where he showed to leaders and workers a clear willingness to contest as a united front against the BJP.*

*The NCP is close to finalising an alliance with Shiv Sena (UBT). This also indirectly signalled the NCP's acceptance of the MNS if it joined the alliance. "All natural friends should stay together. All the MVA parties - Samajwadi, communist parties, Ambedkar parties, the workers have said that all these parties should fight together," NCP MLA Jitendra Awhad said. The Congress has traditionally been opposed to the MNS which it sees as an ideological opposite. But with Uddhav Thackeray keen on contesting the upcoming municipal corporation elections in Mumbai in alliance with its Maha Vikas Aghadi (MVA) allies and cousin Raj Thackeray's Maharashtra Navnirman Sena (MNS), efforts are being put into persuading the Congress to come on board.*

*Mumbai's Brihanmumbai Municipal Corporation (BMC) is the richest civic agency in the country. The election is scheduled early next year.*

*The Congress has already announced it would contest solo. This announcement put a question mark on the possibility of the opposition's electoral unity in Maharashtra. Shiv Sena (UBT)'s proximity with the MNS had not gone down well with the Congress, which had been maintaining a safe distance from the MNS.*

*Though the Congress has welcomed the Thackeray cousins' reunion, it has refrained from a political alignment with the MNS.*

## 20 ஆயிரம் ஏக்கர் பாதிப்பு நாகை விவசாயிகள் வேதனை

*நாகப்பட்டினம்: நாகை மாவட்டத்தில், ஒரு லட்சத்து 62 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சம்பா மற்றும் தாளடி பயிர்கள் சாகுபடியை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர்.இதில் பெரும்பாலும் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ளது.*

*வடகிழக்கு பருவமழையின் தீவிரம் காரணமாக நாகை மாவட்டம் முழுவதும் கடந்த சில தினங்களாக கனமழை கொட்டி தீர்த்தது. இதனால் நேரடி நெல் சாகுபடி செய்யப்பட்டிருந்த சம்பா மற்றும் தாளடி இளம் பயிர்கள் மழை வெள்ள நீரினால் வயல்களில் மூழ்கியுள்ளது. விவசாயிகளுக்கு ஆறுதலாக கடந்த சில நாட்களாக லேசான மழை விட்டு விட்டு பெய்தாலும், விளை நிலங்களில் மழை நீர் வடியாமல் தேங்கி, இளம்நெற்பயிர்கள் மூழ்கிகிடப்பது விவசாயிகளை வேதனையில் ஆழ்த்தியுள்ளது.*

*கடைமடை பாசன விவசாய சங்க தலைவர் தமிழ்செல்வன் கூறுகையில்,கடலில் கலக்கும் ஒவ்வொரு வடிகால் ஆற்றிலும் தடையில்லாமல் தண்ணீர் வடியும் வகையில் முகத்துவாரங்களை தூர்வார வேண்டும் என்ற விவசாயிகள் கோரிக்கையை நீர்வளத்துறையினர் கண்டு கொள்வதில்லை.*



*நாகை- விழுப்புரம் நான்குவழிசாலைபணியின் போது பல இடங்களில் வடிகால் வாய்க்கால்கள்,*

*கழிவுநீர்சாக்கடைகள் போல் மாறிவிட்டது. மூடப்பட்ட வடிகால் வாய்க்கால்களை கண்டறிந்துவெள்ளநீர்வடிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுப்பணித்துறையிடம் கோரிக்கை வைக்கப்பட்டும் பலனில்லை. இதனால் பாலையூர், தலைஞாயிறு, திருக்குவளை, கோகூர், சாட்டியக்குடி, வலிவலம், நரிமனம் போன்ற பகுதிகளில் 20 ஆயிரம் ஏக்கர் பாதிக்கப்பட்டுள்ளது. என்றார்.*

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.